செவெ எண் : 885 நாள் : 8.10.2010

# செய்தி வெளியீடு – 8.10.2010

**67 ஆயிரம் பேருக்கு மேற்பட்ட கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு 17 கோடி ரூபாய் போனஸ் மற்றும் கருணைத் தொகை!**

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களில் திருத்துவதற்கு முன்பு உள்ள ஊதிய விகிதமான 5300 ரூபாய் ஆரம்ப சம்பள விகிதமும், அதற்குக் குறைந்த சம்பள விகிதங்களும் கொண்ட பதவிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் போனஸ் சட்டத்தின்படி 10 ஆயிரம் ரூபாய் என்ற சம்பள உச்ச வரம்பிற்கு விலக்களித்து 2009–2010ஆம் ஆண்டிற்கான போனஸ் மற்றும் கருணைத்தொகை வழங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி, போனஸ் சட்டத்தின்கீழ் வரும் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களுக்கு 8.33 சதவீதம் போனஸ் மற்றும் 1.67 சதவீதம் கருணைத்தொகையாக தலா 4 ஆயிரத்து 200 ரூபாய்க்கு மிகாமல் வழங்கிடவும்;

ஒதுக்கக்கூடிய உபரித்தொகை உள்ள கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களுக்கு ஒதுக்கக்கூடிய உபரித் தொகையின் அடிப்படையில் 20 சதவீதம் வரை தலா 8 ஆயிரத்து 400 ரூபாய்க்கு மிகாமல் போனஸ் தொகை வழங்கிடவும்;

போனஸ் சட்டத்தின்கீழ் வராத கூட்டுறவு இணையங்கள் மற்றும் மாவட்ட கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்குத் தலா 1500 ரூபாயும், தொடக்கக் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களுக்குத் தலா 1200 ரூபாயும், கருணைத் தொகையாக வழங்கிடவும் முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணையின்படி தமிழகம் முழுவதிலும் கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் ஏறத்தாழ 67 ஆயிரம் பணியாளர்களுக்கு மொத்தம் 17 கோடி ரூபாய் அளவுக்கு போனசாகவும், கருணைத்தொகையாகவும் வழங்கப்படும்.

***

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.